மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் வாழ்வியலில் அறபுமொழிச் செல்வாக்கு ஜுனைதா ஷெரீப்பின் சாணைக்கூறை நாவலைதுணையாகக் கொண்டஆய்வு

Latheef Mohamed Hasmathullah,

Department of Arabic, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.

ஆய்வுச் சுருக்கம்

மொழி என்பது கருத்துப்பரி மாற்றத்திற்கான ஊடகம். அந்த ஊடகம் எப்போதும்யதார்த்தநிலையில் தகவல் பரிமாற்றத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டும். மொழியின் இறுதி இலக்கு இலக்கியபடைப்புக்களாகும். நாவல் அதில் அற்புதமான தொருவடிவமாகும். அது சமூக மொன்றின் குரலாக மாறும் போது அதன் வீரியம்பன்மடங்காகும். கிழக்கிலங்கையின் மட்டக்களப்புமாவட்டத்தைச்சேர்ந்தஎழுத்தாளர் ஜுனைதா ஷெரீப் பதின்னான்கு நாவல்களையும் , ஐந்து சிறுகதைத் தொகுப்புக்களையும் மற்றும் ஒரு வானொலி நாடகத் தொகுப்பையும் அச்சு வாகனம் ஏற்றியுள்ளார். அவருடையநாவல்களில் 1985களில் வெளியிடப்பட்டதே "சாணைக்கூறை" நாவலாகும் .இந்நாவலில்அறபுமொழிச்சொற்கள்பலகலந்துள்ளன. இவ்வாய்வு, மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் வாழ்வியலில் காணப்படும் அறபுமொழிச்சொற்களை கண்டறிதலும், பன்னாட்டு ஒலிப்பியல் அரிச்சுவடியைப் பயன்படுத்தி அச்சொற்களுக்கான சரியான தமிழ் வடிவம் , மொழிபெயர்ப்பு மற்றும் அச்சொற்களை பாவிப்பதற்கு தூண்டப்படுகின்ற காரணங்களை இனங்கண்டுவெளிக்கொணர்தல் ஆகியநோக்கங்களைகொண்டுள்ளது. அந்தவகையில்குறித்தநூலில் 64 அறபுச்சொற்கள் உள்ளமைகண்டறியப் பட்டுள்ளது. இச்சொற்களை மூன்று பகுதிகளாகவகுக்கமுடியும். ஒன்றுநபரொருவருக்குபெயராகசூட்டப்பட்டவை, இரண்டு அன்றாடவாழ்வில் பின்னிப்பிணைந்து காணப்படுபவை, மூன்றுவாய் மொழிப்பாடல்களில் காணப்படுபவையாகும். அறபு மொழிச் செல்வாக்கானதுசமய, பொருளாதார, மத்ரஸாகல்விமுறை, தஃவாஇயக்கங்கள், மரபுசார்காரணிகளினால் ஏற்படுகின்றமைகண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் இவ்வறபு மொழிச்சொற்களைமட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் , முஸ்லிம் - முஸ்லிம் என்ற நிலையில் தங்களுக்குள் தொடர்பாடல் ஊடகமாகப் பயன்படுத்திக்கொள்கின் றஅதேவேளை, தங்களுக்குள் பெயர்களாய் வைத்துள்ள சொற்களை தவிர்த்து ஏனைய சொற்களை முஸ்லிம் - தமிழர் என்ற நிலையில் இக்கட்டான சந்தர்ப்பங்களில் பயன்படுத்துகின்றனர் என்பதை இவ்வாய்வினூடாக இனங்காணமுடிகின்றது. இவ்வாய்வுக்காகவிவரணமற்றும் பகுப்பாய்வியல் முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஜுனைதா ஷெரீப் அவர்களின் சாணைக்கூறை நாவல் மற்றும் நேர்காணல் மூலம்பெறப்பட்டதரவுகள் முதனிலைத் தரவுகளாக பயன்படுத்தப்பட்டுள்ளது. பேராதனைப் பல்கலைக்கழக ஓய்வு நிலைப் பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் , பன்னூலாசிரியர் ஏ.பி.எம். இத்ரீஸ் மற்றும் அரபு மொழி சிரே ஷ்ட ஆசிரியர் அ ஷ்ஷெய்க் எஸ்.எம். எம். ஹில்மி ஆகியோர் நேர்காணலுக்குட்படுத்தப்பட்டு , தகவல்கள் சேகரிக்கப்பட்டன ர். இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள் , சஞ்சிகைகள், பத்திரிகைகள் மற்றும் இணையம் ஆகியவைகளினூடாக தகவல்கள் சேகரிக்கப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டன.

திறவுச் சொற்கள் : அறபுமொழி, மட்டக்களப்பு முஸ்லிம்கள், ஜுனைதா ஷெரீப், சாணைக்கூறை

ஆய்வுஅறிமுகம்

மொழி என்பது மனிதர்கள் தங்களின் கருத்துக்களையும் எண்ணங்களையும் பரிமாறிக் கொள்ள உதவும் தொடர்பு முறையாகும். இது குறியீடுகள் , ஒலிகள் மற்றும் விதிமுறைகளின் தொகுப்பாகும். மக்கள் தங்களது கருத்துக்களைப் புரிந்துகொள்ளவும் , வெளிப்படுத்தவும், சிந்திக்கவும் மொழி பயன்படுகிறது. ஓர் இனத்தின் கலாச்சாரம் மற்றும் தனித்துவத்தை வெளிப்படுத்தும் ஒரு கருவியாகவும் மொழி செயல்படுகிறது. இவ்வகையில் மொழியினுடைய அடிப்படை கூறுகளில் ஒன்றே இலக்கியமாகும். மொழி இலக்கியத்திற்கு அடிப்படையாகவும் ,

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

இலக்கியம் மொழியின் செழுமைக்கும் பயன்பாட்டிற்கும் ஒரு களமாகவும் விளங்குகிறது. சமுதாயத்தின் பிரதிபலிப்பாகவும், கலாச்சாரத்தின் வெளிப்பாடாகவும் இலக்கியம் மொழி வழியாகப் படைக்கப்படுகின்றது.

இலக்கியமொன்றின் முக்கிய கூறுகளில் ஒன்றே நாவலாகும். இது நீளமான , புனைகதை உரைநடை இலக்கிய வடிவமாகும். மனித வாழ்வின் சிக்கல்களையும் , உணர்வுகளையும், சமூகத்தின் பல்வேறு கலாச்சாரத் தன்மைகள், சிந்தனைகள் , மரபுகள் , வழக்காறுகள் ,வாழ்வுமுறைமை மற்றும் வரலாற்று நிகழ்வுகளையும் ஆழமாகவும், நுட்பமாகவும் சித்தரிக்கின்றது. இவ்வடிப்படையில் கிழக்கிழங்கை வட்டார இலக்கியத்தின் கதாநாயகனும்,மட்டக்களப்பு கரிசல் இலக்கியத்தின் பிதாமகனாகிய எழுத்தாளர் ஜீனைதா ஷெரீப் அவர்களினால் பிரசவிக்கப்பட்ட நாவலே சாணைக்கூறையாகும். இந்நாவலானது மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களது வாழ்வியல் குறித்து அறியக் கிடைக்கும் பிரதானமான இலக்கிய படைப்பாகும்.

கிழக்கிழங்கை முஸ்லிம்களில் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் தனித்துவமானர்கள். தமிழர்களை பெருன்பான்மையாகக் கொண்ட மட்டக்களப்பு மண்ணில் சிறுபான்மையினராக வாழ்கின்றவர்கள். இவர்களது வரலாறு "போர்த்துக்கேயரின் தாக்குதலினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் கண்டிய மன்னன் செனரத்தினால் (1604-1635) நல்ல முறையில் வரவேற்கப்பட்டு,அவர்களினால் குறைந்தது 4000 பேர் மட்டக்களப்பைச் சூழவுள்ள வளமான நிலங்களில் குடியமர்த்தப்பட்டனர்." (Lorna Dewaraja,1985)"இவ்வாறு குடியமர்த்தப்பட்ட முஸ்லிம்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் பூர்வீக முஸ்லிம் குடித்தொகையினருடன் இணைந்து கொள்கின்றனர்."(நளீம்,எஸ்.ஏ.எம்.,2023 :27).

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள், பெருன்பான்மை தமிழ் மக்களுடன் பன்னெடு காலமாக இரண்டறக் கலந்து வாழ்கின்றார்கள். இதற்கு மிகப்பெரும் சாட்சியாக மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் வாழ்விடம் காணப்படுகின்றது. உதாரணமாக : முஸ்லிம்கள் செறிந்து வாழும் "ஏறாவூர் பிரதேசம் கிழக்கே ஆறுமுகத்தான் குடியிருப்பு எனும் தமிழ் கிராமத்தையும் , மேற்கே செங்கலடி பிரதேசத்தையும் தன் எல்லைகளாக கொண்டுள்ளது." (ஏறாவூர் வரலாறு , 2005 :01) மேலும் "மட்டுநகருக்குத் தெற்கே சுமார் பதினைந்து கிலோ மீற்றர் தூரத்திலுள்ளது குருக்கள் மடம் என்னும் தமிழ்க் கிராமம். சுமார் நான்கு வருடங்களுக்கு முன் அங்கே அமைந்துள்ள கோயிலுக்கு நான் சென்றபோது அக்கோயிலின் நடுவே தலையில் தொப்பியுடன் செதுக்கப்பட்ட ஒரு கற்சிலையைக் கண்டு வியந்து அச்சிலையைப் பற்றிய தகவல்களை அறிய முயன்றேன். அது பட்டாணியர் சிலையென்றும் வருடா வருடம் பட்டாணியர் பூசை அந்தச் சிலைக்காக நிகழ்வது வழக்கமென்றும் அவ்வூர் மக்கள் கூறினர். யார் அந்தப் பட்டாணியர் என்று ஆராய்ந்தபோது அவர்கள் முஸ்லிம்களென்றும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தமிழர்களுக்கும் முக்குவர்களுக்குமிடையே அங்கு நடந்த ஒரு போரில் முக்குவர்களுடன் பட்டாணியர் சேர்ந்து போரிட்டு வென்றதால் அந்த முஸ்லிம் போராளிகளுக்கு நன்றி செலுத்தும் முகமாகவே அந்தச் சிலையென்றும் வருடந்தோறும் அதற்கொரு பூசை நடைபெறுவதென்றும் அறிந்தேன். ஓர் இந்துக் கோயிலில் முஸ்லிம்களுக்காக ஒரு பூசையா என்று ஆச்சரியப்பட்டுச் சந்தோஷப்பட்டேன்." (அமீர் அலி, ஏ.கீ.எல்.,2019 :283)

எனவே மேற்கூறியதன் அடிப்படையில் பன்னெடுகாலமாக தமிழர்களுடன் பின்னிப் பிணைந்து காணப்படுகின்ற மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களிடம் எவ்வாறு அரபுச் சொற்கள் பாவனை ஏற்பட்டது என்பதை இவ்வாய்வு ஆராய முனைகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களும், மொழிப்பயன்பாடும்

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் தாய்மொழியாக தமிழ் மொழி காணப்படுகின்றது. "செனரத் மன்னரின் காலப்பகுதியில் சுமார் 4000 முஸ்லிம்கள் மட்டக்களப்புக்கு குடியேற்றப்பட்டதினூடாக,ஏற்கனவே இங்கு தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொண்ட முஸ்லிம் குழுவினர் வாழ்ந்ததாக ஊகிக்க முடிகின்றது. இதனூடாக மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் இன்று , நேற்றல்ல பன்னெடுகாலமாக தங்களது தாய்மொழியாக தமிழ் மொழியை பேசிவந்துள்ளனர்." (இத்ரீஸ்,ஏ.பீ.எம்.,2025)

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களும், பண்பாடும்

ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் மொத்த வாழ்க்கை முறையே பண்பாடு எனப்படுகின்றது. மக்கள் தலைமுறை தலைமுறையாகக் குழுவாகச் சேர்ந்து கற்று வெளிப்படுத்திய நடத்தை முறைகளும் , பழக்கவழக்கங்களும் மரபுகளும் சேர்ந்ததொரு தொகுதியே பண்பாடாகும். பொதுவாக அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்பட்ட கருத்துக்களும் சமுதாய மரபுரிமையாகப் பெறப்பட்ட நம்பிக்கை , பழக்கவழக்கங்களும் அடங்கிய தொகுப்பைப் பண்பாடு என வரையறுப்பர்.

"சமூகத்திற்கு சமூகம் வேறுபட்டிருப்பதுதான், பண்பாட்டின் சிறப்பான தன்மையாக இருக்கிறது. இவ்வாறு வேறுபட்டிருக்கின்ற பண்பாட்டு அம்சங்கள் ஒவ்வொரு சமூகத்திற்கும் தனித்துவமானவை. அவை அந்த சமூகத்தின் பன்னூற்றாண்டு கால வாழ்க்கை அனுபவத்தின் திரட்சியாக அமைந்தவை. தாம் வாழ்ந்து வந்திருக்கின்ற நிலத்தில் தம்மை நிலைப்படுத்துவதற்காக ஒரு சமூகத்தின் அங்கத்தினர்களினால் பின்பற்றப்பட்டு வந்திருக்கின்ற வாழ்க்கை முறைமையின் வெளிப்பாடுகளாகவும் சாரம்சமாகவும் அந்த சமூகத்தின் பண்பாட்டு அம்சங்கள் விளங்குகின்றன. மனித சமூகங்கள் ஒவ்வொன்றும் எவ்வாறு சமத்துவமானவையோ அதேபோன்று ஒவ்வொரு சமூகத்தின் பண்பாட்டு அம்சங்களும் சமத்துவமானவை." (முஹ்சீன்,அ.வா., 2023 :83)

இவ்வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 76% தமிழர்களுடன் பின்னிப் பிணைந்து வாழ்கின்ற மட்டக்களப்பு முஸ்லிம்களின் பண்பாடு , தங்களுடன் இணைந்து வாழும் ஒரு சமுகத்தின் பண்பாட்டை விட்டு விலகி, இலங்கை முஸ்லிம்களின் பண்பாடுடன் இணைந்தாக காணப்படுகின்றது. சுருக்கமாகக் கூறினால் இஸ்லாமிய சமய வரையறைக்குட்பட்டதாகவும் , சமயத்திற்கு வெளியே எவ்வித பண்பாடுகளுமில்லை என்ற கண்ணோட்டத்திற்குட்பட்டதாகவும் காணப்படுகின்றது.

ஜீனைதா ஷெரீப் - ஓர் அறிமுகம்

கிழக்கிலங்கை வட்டார இலக்கியத்தின் கதாநாயகன் , ஈழத்து எழுத்துலகின் ஜாம்பவான் , மிகச்சிறந்த கதைசொல்லி, மட்டக்களப்புக் கரிசல் இலக்கியத்தின் பிதாமகன் ஜுனைதா ஷெரீப், 1940.09.15 இல் காத்தான்குடியில் பிறந்தார். காத்தான்குடி என்பது அவர் பிறந்த காலத்தில் சிறிய கிராமம். அந்தக் கிராமத்தில் பிறந்தே அத்தனையும் சாதித்தார் ஜுனைதா ஷெரீப். அவரது இயற்பெயர் கச்சி மொஹமட் மொஹமட் ஷெரீப். அவரது தந்தை கச்சி மொஹமட், தாய் யூசுப் லெவ்வை கதீஜா உம்மா. அல் நஸார் வித்தியாலயமெனப் பெயர் கொண்ட காத்தான்குடி முதலாம் குறிச்சிப் பாடசாலை மற்றும் காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்றார். 1958 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆசிரியராக இணைந்து பின்னர் இலிகிதராக நியமனம் பெற்று மட்டக்களப்பு கச்சேரியில் பல வருடங்கள் கடமை புரிந்தார்.

1975 ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை நிருவாக சேவை பரீட்சையில் சித்தியடைந்த இவர் கிழக்கு மாகாணத்தின் முதல் முஸ்லிம் நிருவாக சேவை அதிகாரியாக தெரிவு செய்யப்பட்டார். அதன் பின்னர் 1975ஆம் ஆண்டு அட்டாளைச்சேனையின் பிரிவுக் காரியதரிசியாகவும் பின்னர் பிரிவு உதவி அரசாங்க அதிபராகவும் , 1977 ஆம் ஆண்டு வீசிய சூறாவளிக்குப் பின்னர் தலைமையக உதவி அரசாங்க அதிபராகவும் கடமையாற்றினார். மேலும் 1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும் கடமையாற்றியுள்ளார்.

1992 ஆம் ஆண்டு முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களத்தின் பணிப்பாளராக கடமையாற்றியதுடன் 1994 ஆம் ஆண்டு புனர்வாழ்வு அதிகார சபையின் மேலதிக பொது முகாமையாளராகவும் கடமையாற்றினார். இன விவகார தேசிய நல்லிணக்க அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும் கடமை புரிந்துள்ளார்.

அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் ஐக்கிய நாடுகள் வாழ்விட நகர முகாமையாளராகவும், கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோவின் இணைப்பாளராகவும் செயலாற்றியுள்ள இவர் 1996 ஆம் ஆண்டு ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பட்டப்பின் டிப்ளோமா கற்கைநெறியையும் பூர்த்தி செய்துள்ளார்.

சுமார் 80 வயதை கடந்த நிலையிலும் இடைவிடாத எழுத்துப் பயணத்தில் திளைத்திருந்த இவர், "ஜுனைதா ஷெரீப்" என்ற புனைப் பெயரில் எழுதி வந்ததால் எல்லோரும் அவரை ஒரு பெண் எழுத்தாளர் என்றே நீண்ட காலமாக எண்ணியிருந்தனர். எனினும் இவர் "ஜுனைதா" எனும் தனது மனைவியின் பெயரை இணைத்தே

"ஜுனைதா ஷெரீப்" எனும் புனைப்பெயரை கட்டமைத்திருந்தார். "நிர்வாக சேவை அதிகாரியாக இருந்தமையினால் அவரது சொந்தப் பெயரில் கருத்துக்களை அல்லது படைப்புக்களை வெளியிடுவதில் இருந்த சில மட்டுப்பாடுகளை மையமாக வைத்தே மனைவியின் பெயரை சேர்த்து இப்புனைப்பெயர் கட்டமைத்தமையும் , ஈற்றில் அதுவே அவருக்கு சர்வதேச அளவில் தர அடையாளமாக (Brand Name)மாறியமையையும் அவுஸ்திரேலிய வானொலி ஒன்றுக்கு அவர் மரணிப்பதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்னர் வழங்கிய பேட்டி ஒன்றில் குறிப்பிட்டிருந்தார். ஜுனைதா ஷெரீப், காத்தான்குடி என விலாசமிடப்பட்டாலே தனது வீட்டிற்கு கடிதம் வந்து சேர்ந்துவிடும் அளவுக்கு அந்த புனைப்பெயர் பிரபல்யம் அடைந்தமையினையும் கூறி அவர் நெகிழ்ந்திருந்தார்." (அம்ஜாட், எப்.எச்.ஏ.,2021 :09)

இவ்வாறு எழுத்துலகிலும் ,நிருவாக சேவையிலும் தடம்பதித்த ஜுனைதா ஷெரீப் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில் தனது 82ஆவது வயதில் 03.10.2021ம் திகதியன்று இறைபதமடைந்தார்.

ஜுனைதா ஷெரீப் அவர்களின் படைப்புக்கள்

தேசிய ரீதியாகவும் மற்றும் வட கிழக்கு மாகாண ரீதியாகவும் நான்கு சாகித்திய விருதுகள் , இலங்கை அரசின் கலாபூசண விருது , இலக்கிய வித்தகர் விருது உட்படப் பல விருதுகளைப் பெற்றுள்ள ஜுனைதா ஷெரீப், தனது இலக்கிய பயணத்தில் பதின்னான்கு நாவல்களையும் , ஐந்து சிறுகதைத் தொகுப்புக்களையும் மற்றும் ஒரு வானொலி நாடகத் தொகுப்பையும் அச்சு வாகனம் ஏற்றியுள்ளார்.

நாவல்கள்:

- *அவன் ஒன்று நினைக்க..., 1976*
- *சாணைக்கூறை, முதல் பதிப்பு 1985*
- *அவளுக்கும் ஓர் இதயம், 1985*
- *மூன்றாம் முறை, 1986*
- *காட்டில் எறித்த நிலா, 1987*
- *பெட்டிசம், (சிங்கள நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பு) 1988*
- *ஒவ்வாமுனைக் காந்தங்கள், 1990*
- *ஒரு கிராமத்தின் துயில் கலைகிறது, 1995*
- *இது நம்ம சொத்து, 1998*
- *சிதைவுகள், 2000*
- *ஜனநாயகர்கள், 2000 (வடகிழக்கு மாகாண சபையின் சாகித்திய விருது பெற்றது)*
- *பெரிய மரைக்கார் சின்ன மரைக்கார் , 2005 (தேசிய மற்றும் வடகிழக்கு மாகாண சபையின் சாகித்திய விருதுகளைப் பெற்றது)*
- *சூனியத்தை நோக்கி..., 2017 (தஞ்சாவூர் பல்கலைக்கழக 'கரிகாலற்சோழன்' விருது பெற்றது)*
- *விடியாத இரவு, 2020 (கிழக்கு மாகாண பண்பாட்டலுல்கள் திணைக்கள வெளியீடு)*

சிறுகதைத் தொகுப்புகள்:

- *இளநரை, 1985*
- *இவளுக்காகவா?, 1991*
- *சலாமத்போ, 2007*
- *சீதக்காதினி, 2014 (கிழக்கு மாகாண சபையின் சாகித்திய விருது பெற்றது)*
- *கனவுலகம், 2018 (தேசிய சாகித்திய விருது பெற்றது)*

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

© 2026, IRJTSR

வானொலி நாடகத் தொகுப்பு:

- *பொன்னாடை. 1988 (தேசிய சாகித்திய விருது பெற்றது)*

சாணைக்கூறை நாவலும், அரபுச் சொற்களின் பயன்பாடும்

1970 களில் ஈழத்து இலக்கிய உலகிலே அதிகம் பேசப்பட்ட எழுத்தாளர் ஜுனைதா ஷெரீப் அவர்களினால் 1985 களில் கல்ஹின்ன தமிழ் மன்றத்தின் உதவியுடன் தனிப்பெரும் படைப்பாக படைக்கப்பட்டதே சாணைக்கூறை நாவலாகும். இந்நூல் வெளிவருதற்கு முந்திய காலப்பகுதியில் தினகரன் பத்திரிகையில் தொடராக எழுதப்பட்ட பல தொடர்களின் முழு முதல் தொகுப்பே இந்நூலாகும். இவ்வகையில் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் அரபுச் சொற்கள் பயன்பாட்டை பறைசாட்டும் வகையில் இந்நூலில் சுமார் 64 அரபுச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அச்சொற்களை மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் பாவனை முறைகளுக்கேற்ப மூன்று முறைகளில் பிரிக்க முடியுமாக காணப்படுகின்றது.

1.பெயர்களாய்ச்சூட்டப்பட்டசொற்கள்

பயன்பாட்டிலுள்ள அரபு வடிவம்	பன்னாட்டு ஒலிப்பியல் அரிச்சுவடி(IPA)		அரபுமூலவடிவம்	மொழிபெயர்ப்பு அல்லது வரைவிலக்கணம்
	சரியான தமிழ் வடிவம்	IPA		
மூமின்	மு்மின்	/mu:min/	مُؤْمِن	இறை விசுவாசமுள்ளவர்
மரியம்	மர்யம்	/mar.jam/	مَرْيَم	இது பண்டைய செமித்திய மொழிப் பெயராகும்;. அரபு மற்றும் இஸ்லாமிய பாரம்பரியத்தில், ஈசா (இயேசு) நபியின் தாயார் மர்யமாக கருதப்படுகிறார். "இறைவனால் விரும்பப்பட்டவர்"; என்று மொழிபெயர்க்கப்படுகின்றது
சல்மா	ஸல்மா	/sal.ma:/	سَلْمَى	பாதுகாப்பானவள், சமாதானமானவள்
யாசீன்	யாஸீன்	/ja:.si:n/	يس	இது குர்ஆனின் 36வது அத்தியாயத்தின் தலைப்பாகும், மேலும் இது ஒரு இரகசிய சொல்லாகக் கருதப்படுகிறது. இதற்கு ஒரு குறிப்பிட்ட மொழிபெயர்ப்பு இல்லை.
மஜீத்	மஜீத்	/madʒi:d/	مَجِيد	கீர்த்திக்குரியவர்
காசீம்	காஸிம்	/qa:.sim/	قاسم	பங்கீடு செய்பவர், இது இறைவனின்(அல்லாஹ்வின்) 99 பெயர்களில் ஒன்றாகும்.
காதர்	காதிர்	/qa:.dir/	قَادِر	திறன் மிகுந்தவர், சக்திவாய்ந்தவர்.
முகைதீன்	முஹ்யியுத்தீன்	/muħ.ji‿d.di:n/	محي الدين	மதத்தை(இஸ்லாத்தை)

				உயிர்ப்பிப்பவர்.

2.அன்றாடவாழ்வில்பின்னிப்பிணைந்துகாணப்படுகின்றமதம்சார்சொற்கள்

பயன்பாட்டிலுள்ள அரபு வடிவம்	பன்னாட்டு ஒலிப்பியல் அரிச்சுவடி (IPA)		அரபு மூல வடிவம்	மொழிபெயர்ப்பு அல்லது வரைவிலக்கணம்
	சரியான தமிழ் வடிவம்	IPA		
ஹச்சு	ஹஜ்	/ħadʒ:/	حَجّ	இஸ்லாமிய சமயத்தின் ஐந்து அடிப்படை கடமைகளில் ஐந்தாவது கடமையே இதுவாகும்.வசதிபடைத்த மற்றும் பலமுள்ள ஒவ்வொரு இஸ்லாமியரும் இக்கடமையை நிறைவேற்ற வேண்டும்.
மௌத்	மௌத்	/mawt/	موت	மரணம்
ஹதீது	ஹதீஸ்	/ħa.di:θ/	حديث	இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களது சொல்,செயல்,அங்கீகாரம்.
அல்லா	அல்லாஹ்	/alˤ.lˤa:h/	الله	இறைவன்
கொத்பா	குத்பா	/ˈkʊtbə/	خُطْبَة	பிரசங்கம்(வெள்ளிக்கிழமை தொழுகைக்கு முன்னர் நிகழ்த்தப்படும் சொற்பொழிவைக் குறிக்கும்.)
அஸறு	அஸ்ர்	/ʕasˤr/	عَصْر	பிற்பகல், இது ஒரு நாளின் மூன்றாவது கடமையான தொழுகையின் பெயராகும்.
கப்று	கப்ர்	/qabr/	قَبْر	மண்ணறை
ஹறாம்	ஹராம்	/ħa.ra:m/	حَرَام	தடைசெய்யப்பட்டது(இஸ்லாத்தில் பாவகரமான செயலாகக் கருதப்படுவது)

3.வாய்மொழிப்பாடல்களில்ததும்பிக்காணப்படும்சொற்கள்

“ஆசைக்கடல்பொங்கிநின்று"

“இல்லல்லாஹ்இல்லல்லாஹ்”

“அலிபுலாமீன்முழங்கிநின்று”

“இல்லல்லாஹ்இல்லல்லாஹ்"

"ஓசையாம்ஒருவலம்புரியாம்"

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

© 2026, IRJTSR

"இல்லல்லாஹ்இல்லல்லாஹ்"

"ஓடும்கப்பல்முஹம்மதியாம்"

"இல்லல்லாஹ்இல்லல்லாஹ்"

"கப்பலில்சரக்குஓப்பாமல்ஏத்திகணக்கொன்றும்தவறாமல்கடகடன்றெழுதிஆசையாபறக்குதுகாஆகாசக்கப்பல்.."

ஆய்வுமுடிவுகள்

மட்டக்களப்புமாவட்டமுஸ்லிம்களிடம்அரபுமொழிச்சொற்கள்பயன்பாட்டுக்கானகாரணங்களைஇவ்வாய்வுஇருவகைப்படுத்துகின்றது.

1.**முதன்மைக்காரணம்**

- **இஸ்லாமியசமயம்**

இஸ்லாமியசமயத்தின்மூலமொழிஅரபுமொழியாகும். ஆகவே "சமயத்தின்மூலக்காரணியாகஏதோவொருவகையில்அரபுமொழியைமுஸ்லிம்கள்பயன்படுத்ததிணிக்கப்பட்டுள்ளனர்." (நுஃமான்எம்.ஏ., 2025) இந்தபின்னணியில்மட்டக்களப்புமாவட்டத்தில்வாழும்முஸ்லிம்கள்மாத்திரமல்ல, உலகமெங்கும்பரவி,விரவிவாழ்கின்றஅனைத்துலகமுஸ்லிம்களும்இந்நிலைக்குதள்ளப்பட்டுள்ளனர்.

2.**துணைக்காரணங்கள்**

- **மரபுசார்காரணி**

இந்தியாவின்தமிழ்நாடுமற்றும்இலங்கைமுஸ்லிம்களிடையேஅரபுச்செல்வாக்குஏற்படுவதற்கானகாணங்களில்ஒன்றாகஅரபுத்தமிழைஅடையாளப்படுத்தமுடியுமாகவுள்ளது.இவ்அரபுத்தமிழினூடாகணிசமானளவுஅரபுச்சொற்களைஇற்றைவரைதமிழ்நாடு,இலங்கைமுஸ்லிம்கள்பயன்படுத்துகின்றனர் (ஹில்மி, எஸ்.எம்.எம்.,2025)

- **பொருளாதாரக்காரணி**

இலங்கையில்1977ம்ஆண்டுஅறிமுகப்படுத்தப்பட்டதிறந்தபொருளாதாரகொள்கையின்விளைவாகவிவசாயத்தையும்வியாபாரத்தையும்மட்டுமேவாழ்வாதாரமாகநம்பியிருந்தமுஸ்லிம்கள்,
மத்தியகிழக்குஅரபுநாடுகளுக்குதொழில்நிமித்தம்செல்லஆரம்பித்தனர்.
இதுஅவர்களிடையேஅரபுமொழிப்பிரயோகம்ஏற்படவும், செல்வாக்குச்செலுத்தவும்காரணமாகியது.

- **மத்ரஸாகல்விமுறைமை.**

மத்ரஸாகல்விமுறைமைஎன்பதுகுருகுலகல்விமுறைபோன்றதாகும்.ஆரம்பகாலம்தொட்டுபெற்றோர்கள்தமதுபிள்ளைகளைவெளிப்பராக்குகளிலிருந்துபாதுகாக்கவும்,சமயஈடுபாட்டைஏற்படுத்தவும்அதிகமாகமத்ரஸாக்களில்சேர்த்தனர். இவ்வாறுசேர்க்கப்பட்டவர்கள்"மௌலவிமார்களாக"அங்கீகாரம்பெற்று, தன்சார்சமூகத்தின்ஆன்மீகமற்றும்அறநெறிமுன்னேற்றத்திற்குவழிகாட்டுபவர்களாகதிகழ்ந்தனர்.இவ்வகையில்மேற்படி"மௌலவிமார்களினால்"அரபுமொழிச்செல்வாக்குவலுவடைந்தது.

- **தஃவாஇயக்கங்கள் (அழைப்புப்பணி)**

1970களுக்குமுந்தியவரலாற்றைக்கொண்டதஃவாஇயக்கங்களானசூபிதரீக்காக்கள்மற்றும்தப்லீக்ஜமாஅத் போன்றஇயக்கங்களால்ஈண்டுகுறிப்பிடத்தக்களவுஅரபுமொழிப்பயன்பாடுமட்டக்களப்புமாவட்டம்உட்படஇலங்கை,தமிழ்நாடுபோன்றபகுதிகளிலும்காலுன்றிக்காணப்பட்டது.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

முடிவுரை

இறுதியாக இவ்வாய்வினூடாக,
மட்டக்களப்புமாவட்டமுஸ்லிம்கள்மட்டக்களப்புமாவட்டத்தில்சகோதரதமிழினமக்களுடன்பிட்டும்தேங்காய்ப்பூ போன்றுஇரண்டறக்கலந்துவாழ்ந்தாலும்அவர்களதுவாழ்க்கையில்கணிசமானளவுஅரபுச்சொற்களைபரந்துகாணப்படுகின்றதுஎன்பதைசாணைக்கூறைநாவலினூடாகஅவதானிக்கமுடிகின்றது.
எவ்வாறாயினும்மேற்படிஅரபுச்சொற்களைமுஸ்லிம் -
முஸ்லிம்என்றநிலையில்தங்களுக்குள்தொடர்பாடல்ஊடகமாகப்பயன்படுத்தினாலும்,
தங்களுக்குள்பெயர்களாய்வைத்துள்ளசொற்களைதவிர்த்துஏனையசொற்களைமுஸ்லிம் -
தமிழர்என்றநிலையில்இக்கட்டானசந்தர்ப்பங்களில்பயன்படுத்துகின்றனர்என்பதைஇவ்வாய்வினூடாகஇனங்காணமுடிகின்றது.

உசாத்துணைநூற்பட்டியல்

[1] அமீர் அலி, ஏ. கி. எல். (2019). சிந்தனைச் சுவடுகள். Mohamed Pitchai Mohamed Jaleel.

[2] இத்ரீஸ், ஏ. பீ. எம். (2011). சோனகத் தேசம்: மிகச் சுருக்கமான அறிமுகம். சோனகம் பதிப்பகம்.

[3] ஏறாவூர் வரலாற்று ஆய்வு மையம். (2005). ஏறாவூர் வரலாறு. ஏறாவூர் வரலாற்று ஆய்வு மையம்.

[4] ஜுனைதா ஷெரீப். (2023). சாணைக் கூறை. கஸல் பதிப்பகம்.

[5] நளீம், எஸ். ஏ. எம். (2023). ஏறாவூர் படுகொலைகள்: வரலாறும் பின்னணியும். ஏறாவூர் ஸுஹதாக்கள் ஞாபகார்த்தப் பேரவை.

[6] மீரா முகைதீன் , எச். எல். (2018). இலங்கை தமிழ்ச் சிறுகதைகளில் அரபு மொழிச் செல்வாக்கு: ஓட்டமாவடி அறபாத்தின் சிறுகதைகளை துணையாகக் கொண்ட ஆய்வு. 5th International Symposium, FIA, SEUSL.

[7] முஹ்சீன், அ. வா. (2023). இலங்கை முஸ்லிம்களை புரிந்து கொள்ளல். கஸல் பதிப்பகம்.

[8] ரவூப் ஸெய்ன். (2024). இலங்கை மத்ரஸா கல்வி: அபிவிருத்திக் கற்கைகள் மையம்.

- المنجد في اللغة والأعلام. (2000). (الطبعة 48). دار المشرق.
- المنجد في اللغة العربية المعاصرة. (2000). (الطبعة 4). دار المشرق.
- الدكتور روحي البعلبكي، (2010)،المورد قاموس عربي –إنكليزي،دار العلم للملايين .

நேர்காணல்கள்

- நும்மான், எம். ஏ. (2025, செப்டம்பர் 2). நேர்காணல் [ஓய்வுநிலைப் பேராசிரியர், பேராதனைப் பல்கலைக்கழகம்].
- இத்ரீஸ், ஏ. பீ. எம். (2025, செப்டம்பர் 3). நேர்காணல் [பன்னூலாசிரியர், வாழைச்சேனை].
- ஹில்மி, எஸ். எம். எம். (2025, ஆகஸ்ட் 29). நேர்காணல் [சிரேஷ்ட ஆசிரியர், மட்/மம/அலிகார் தேசிய பாடசாலை].

இணையத்தளம்

- Wikipedia contributors. (2025, May 30). Help:IPA/English. Wikipedia. Retrieved May 6, 2025, from https://en.wikipedia.org/wiki/Help:IPA/English
- Wikipedia contributors. (2025, Augest 30). Help:IPA/Introduction. Wikipedia. Retrieved August 6, 2025, from https://en.wikipedia.org/wiki/Help:IPA/Introduction

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்